**பத்தேகம பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2016 பெப்ரவரி 31 ஆந் திகதியன்றும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2015 மார்ச் 06 ஆந் திகதியன்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியினது அறிக்கை 2016 யூன் 21 ஆந் திகதியன்று நகர சபைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுமிருந்தது.

### 1.2 முனைப்பழியான அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து புத்தளம் நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கையில் கடைப்பிடிக்கப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக் கூற்றுக்களின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) முன்னைய ஆண்டில் பெறப்பட்ட ரூபா 363,096 க்கான கெல்வனைஸ்ட் குழாய்கள் 328 இன் பெறுமதி மற்றும் மோட்டார் கிறேடரினதும் 02 டிறெய்லர்களதும் பெறுமதி கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது ரூபா 286,600 க்குக் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களது பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை. அத்துடன், ஆண்டின்போது நிர்மாணிக்கப்பட்ட 03 கட்டிடங்களது பெறுமதி ரூபா 249,012 குறைவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின்போது உள்ளூரர்க் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குக் கொடுப்பனவு செய்யவேண்டிய கடன் தவணைப் பணமாகிய ரூபா 167,556 மற்றும் உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்குச் செலுத்தவேண்டிய பங்களிப்புத் தொகையாகிய ரூபா 6,187,360 என்பன கணக்கிலிடப்படவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின்போது 03 வேலைகளுக்கான கடன்பட்டோர் தொகை மற்றும் கடன்பட்டோர் மீதி என்பவற்றின் கூட்டுத்தொகையாகிய ரூபா 458,354 அதிகரித்தும் வேறு 02 கடன்கொடுத்தோர் மீதிகளது ரூபா 197,621 கூட்டுத்தொகையும் நீதிமன்றத் தண்டப்பண வருவாயாகிய ரூபா 91,583 குறைவாகவும் கணக்கிலிடப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின்போது நிறைவேற்றப்பட்ட ரூபா 7,196,977 கூட்டுத்தொகையுடைய 08 வேலைகளுக்குக் கடன்கொடுத்தோருக்கான நிதியேற்பாடு மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.3 கணக்கிணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 15,171,108 கூட்டுத்தொகையுடைய 8 கணக்கீட்டு விடயங்களது மீதி அவற்றுடனொத்த உப பதிவேடுகள் மற்றும் அறிக்கைகள் என்பவற்றில் காணப்பட்டும் மீதி என்பவற்றுக்கிடையே ரூபா 11,000,132 கூட்டுத்தொகையுடைய வித்தியாசம் நிலவியது.

### 1.3.4 தொங்கற் கணக்கு

முன்னைய ஆண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 5,581,230 தொங்கற் கணக்கு வரவு மீதியை இனங்கண்டு அதற்கேற்பச் சீராக்கலை மேற்கொண்டு கணக்குகளைத் தீர்த்து வைக்காது, திரண்ட நிதியக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.3.5 பெறவேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் 10 ஆண்டுகளுக்கும் அதிகமாக மாற்றமில்லாது முன்கொண்டு வரப்பட்டவாறிருக்கும் ரூபா 40,282 கூட்டுத் தொகையுடைய 02 பெறவேண்டிய கணக்கு மீதிகள் மற்றும் மற்றும் கொடுப்பனவு செய்யவேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகையான ரூபா ர384,685 என்பனவும் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 686,497 கூட்டுத்தொகையுடைய வேறு 02 கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்கு மீதிகளும் தீர்த்து வைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் மேற்கொள்ளப்படவில்லை.

### 1.3.6 கணக்காய்விற்கான சான்றின்மை

காணிகள், கட்டிடங்களது பெறுமதி ரூபா 71,456,390 கூட்டுத்தொகை ஆகும். இவற்றினது உரித்துறுதி மற்றும் உரித்தை உறுதிப்படுத்தும் ஆவணங்களும் ரூபா 33,141,960 கூட்டுத்தொகையுடைய நிலையான சொத்துக்கள் முறையாக சொத்து வகைப்படுத்தலுக்கமையத் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துப் பதிவேடும், ரூபா 25,103,761 கூட்டுத்தொகையுடைய கடன்பட்டோரினதும் கடன்கொடுத்தோரினதும் மீதிகள் தொடர்பான கடன்பட்டோா் மற்றும் கடன்கொடுத்தேரா பதிவேடுகளும், காலப்பகுப்பாய்வும் மீதிகளது உறுதிப்படுத்தல் போன்றன சமா்ப்பிக்கப்படாமையால் அவற்றைக் கணக்காய்வில் திருப்திகரமாகப் பரிசீலிக்க முடியவில்லை.

### 1.3.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீா்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கீழே விபரிக்கப்பட்ட பிரமாணங்களுடன் இணங்காத சந்தா்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
|---|---|
| (i) நிதிப் பிரமாணம் 371(2) | சபையால் 02 சந்தா்ப்பங்களில் உத்தியோகத்தா்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 17,850 முற்பணமானது தீா்த்து வைக்கப்படவில்லை. |

| | | |
|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 570 மற்றும் 571(1)(2) என்பன | குறித்த நிதிப் பிரமாணங்களின் படி ரூபா 2,794,009 கூட்டுத்தொகையுடைய வைப்புகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (iii) | நிதிப் பிரமாணங்கள் 1645, 1646 என்பன | சபைக்குரிய 12 வாகனங்களது 2012 சனவரி முதல் 2015 டிசெம்பர் வரையான நாளாந்த ஓட்ட அட்டவணைகளும் மாதாந்தச் செயலாற்றல் பொழிப்புகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2015 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 11,784,647 ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருவாய் ரூபா 8,034,220 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறுகள் ரூபா 3,750,427 அதிகரிப்பைக் காட்டுகின்றது.

(ஆ) நிகழ்ச்சித் திட்டங்களின் பிரகாரம் மீளாய்வாண்டினது மீண்டுவரும் வருவாய் மற்றும் செலவினம் ஆகியவற்றை ஒப்பிடுகையில் 04 நிகழ்ச்சித் திட்டங்களில் வருவாயிலும் கூடிய செலவினம் உருவாகி இருந்தது.

(இ) மீளாய்வாண்டில் மூலதன வருவாயை விட மூலதனச் செலவினம் வரூபா 5,682,800 அதிகரித்திருந்தது.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

**மொத்த வருவாய் மற்றும் மொத்தச் செலவினம்வ என்பவற்றுக்கு இடையேயான விகிதம்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மொத்த வருவாயின் 83 சதவீதமாக மொத்தச் செலவினம் நிலவுவதால் சபையின் வருவாயுடன் ஒப்பிடுகையில் செலவினமானது மிக அதிகரித்த மட்டத்தில் இருப்பது அவதானிக்கப்பட்டது.

(ஆ) வருவாய்க்கான உதவி கிடைக்காது போயின் சுய உற்பத்தி வருவாயின் மூலம் மீண்டு வரும் செலவினத்தை ஈடு செய்வதற்கு எவ்விதத்திலும் வழியேற்படாததுடன், செலவைக் கட்டுப்படுத்துவதைப் போன்றே வருவாயை அதிகரிப்பதற்கும் சபை கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்பது கணக்காய்வினது அபிப்பிராயமாகும்.

## 2.3 வருவாய் நிர்வாகம்

### 2.3.1 வருவாயைச் சேகரிப்பதிலான செயலாற்றல்

2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் வருவாய்ச் சேகரிப்பிலான செயலாற்றல் தொடர்பாகப் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் தீர்வையும் வரியும் ஏக்கர் வரி, குத்தகை வாடகை, வர்த்தக அனுமதிப்பத்திரம் என்பவற்றிற்க மதிப்பீடு செய்த தொகை ரூபா 44,646,400 ஆகும். இதில் ரூபா 3,944,862 சேகரிக்கப்பட்டிருந்தது. அதற்கமைய, வருவாய்ச் சேகரிபின் செயல் முன்னேற்றம் வ09 சதவீமான குறைந்த மட்டத்தில் அமைந்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் உள்ள தீர்வையும் வரியும் ஏக்கர் வரி, குத்தகை வாடகை மற்றும் வர்த்தக அனுமதிப்பத்திர நிலுவை ரூபா 9,694,913 கூட்டுத்தொகையாகும். இதில் ரூபா 3,944,862 அறவிடப்பட்டிருந்தது. அதற்கமைய, வருவாய் நிலுவையை அறவிடுவதில் நிலவிய செயல் முன்னேற்றம் ஏறக்குறைய 41 சதவீதமாகும்.

### 2.3.2 தீர்வையும் வரியும் மற்றும் ஏக்கர் வரியும்

தீர்வையும் வரியும் அறவிடப்படுவதானது மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தமையால் ஆண்டின் இறுதியில் அறவிடப்பட வேண்டியிருந்த மீதி மிகவும் கூடிய மட்டமாகிய ரூபா 5,173,221 ஆகவிருந்தது. எவ்வாறாயினும், வரி நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1)(அ) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.3 குத்தகை வாடகை

குத்தகை வாடகையினது நிலுவையை அறவிடுவதானது மிகக் குறைந்த மட்டத்தில் இருந்தமையால் மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த நிலுவை ரூபா 552,081 ஆகும். குத்தகை வாடகை நிலுவையை அறவிடுவதற்கு 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. கேள்விகளுக்கான தீர்மானத்தையும் மீறும் வகையில் கடைகளிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிருந்ததுடன், வரியிறுப்பாளர் அல்லாத வேறு சிலரிடமிருந்தும் சந்தை வரி சேகரிக்கப்பட்டிருந்தது.

### 2.3.4 கடைகளுக்கான வரி

(அ) பத்தேகம நகரில் அமைந்துள்ள 14 கடைகளிலிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 233,310 கடை வாடகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

(ஆ) உடைந்து வீழ்ந்தமையால் மூடப்பட்டிருந்த 03 கடைகள் பாவனைக்குப் பொருத்தமற்றவை என விலைமதிப்புத் திணைக்களம் அறிவிருத்திருந்த போதும், மீளாய்வாண்டு முடிவளவிலும் அது தொடர்பாக எதுவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப் பணமும் முத்திரைக் கட்டணமும்

மாகாண சபையின் தலைமைச் செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகள் ஆகியோரிடமிருந்து 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரைக் கட்டணமாக ரூபா 11,441,220 நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 350,958 எனப் பெறவேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறமையின்மை

கீழே காணப்படும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு முடிவில் உள்ளவாறு 26 ஆகவிருந்த மேலதிகப் பதவியணியை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கையில் சபை கவனஞ் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2005 மார்ச் 31 ஆந் திகதிய 08/2005 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 11.5.2 க்கமைய சொத்துக்களுக்கான கடனின் பொருட்டு அரசாங்கம் செலவிடும் தொகை செலவானது சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட வேண்டுமாயினும், அந்த ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2016 சனவரி 10 ஆந் திகதியளவில் சபையானது உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து பெறவேண்டியிருந்த தொகை ரூபா 902,776 ஆகும்.

## 4. நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 வரவு, செலவுத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான வரவு, செலவுத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 02 செலவின விடயங்களது அங்கீகரிக்கப்பட்ட எல்லைக்கு அதிகமாக ரூபா 10,707,132 செலவிடப்பட்டிருந்ததுடன், ஏனைய 04 செலவின விடயங்களில் ரூபா 33,964,451 கூட்டுத்தொகையுடைன சேமிப்பும் 02 வருவாய் விடயங்களது இலக்கை எய்தாத ரூபா 36,874,229 வருவாயும் நிலவியதால் வரவு, செலவுத் திட்டமானது ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கீழே காணப்படும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிர்வாகம்
(இ) மனிதவள முகாமைத்துவம்
(ஈ) சொத்து முகாமைத்துவம்
(உ) வாகனக் கட்டுப்பாடு